## 18 தேர்ச்சி - மூன்று :- அறநெறி வாழ்வைக் காட்டும் இறை கட்டளைகளைக் கடைப்பிடிப்பர்.

# 3.5 நற்செயல்களால் நல்வாழ்வு வாழ்வோம்

★ இந்தப் படத்தில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.



- நீங்கள் எதைக் காண்கிறீர்கள்?
- இந்தப் படத்தைப் பார்க்கும்போது உங்களுக்கு ஏற்படும் உணர்வுகள் எவை?
- உங்கள் வாழ்வில் இவ்வாறான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளனவா?
- உங்கள் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

இதன் வழியாக நாம் நமது சகோதரர் மட்டில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென இறைவன் கூறியுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

- கொலை செய்யாதே.
- விபசாரம் செய்யாதே.
- களவு செய்யாதே.
- பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே.
- பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.
- பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

(வி.ப. 20:13-17)

இவ்வாறு இறைவன் தாம் வழங்கிய கற்பனைகள் வழியாக நாமும் நமது சகோதரர்களும் எவ்வாறு வாழ வேண்டுமென்பதை எடுத்துக்காட்டியுள்ளார். இறைவன் மனிதனைத் தனது உருவில் படைத்து அவனது நாசிகளில் தனது உயிர் மூச்சை ஊதிப் படைத்ததனால் நாம் எல்லோரும் ஒரே சகோதர உறவில் இருக்கின்றோம். நாம் மற்றவர்களோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

**கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார், கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.**

**(தொ. நூ. 1 : 27)**

**அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.**

**(தொ. நூ. 2 : 7)**

- **நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பின்வரும் பாடலைப் பாடுவோம்.**

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
என் சகோதரன்

1. வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல்படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் –2

2. பிறகுலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் வாழ்ந்தாலும் சகோதரன்
பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிறமதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் –2

(இராக தீபங்கள் # 208)

- இப்பாடலின் வழியாக உமக்குக் கிடைக்கும் செய்திகள் ஐந்து எழுதுக.

1. ..........................................................................................

2. ..........................................................................................

3 ..........................................................................................

4. ..........................................................................................

5. ..........................................................................................

நம் அயலவர்க்குக் காட்டும் இவ்வாறான அன்பு ஒரு கிறிஸ்தவப் பண்பாகும். இது ஓர் உள்ளார்ந்த பண்பாகும். இப்பண்பானது மனிதனையும் சமூகத்தையும் நல்வாழ்வுக்கு இட்டுச் சென்று அர்த்தமுள்ளதாக்கும். இதன் வழியாக நாம் நல்வாழ்வு வாழலாம்.

இப்படியான நல்வாழ்வு வாழ்ந்து புனித நிலையை அடைந்தவர்களுள் அன்னை திரேசா, டெமியன் அடிகளார், பிரடெரிக் ஓசானம் அடிகளார் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

**அன்னை திரேசா** – ஏழ்மையில் வாழ்பவர்களுக்கு
சமூகத்தில் ஒடுக்கப்பட்டடவர்களுக்கு
வேண்டப்படாத ஏழைகளுக்கு
அறியாமையில் இருந்தவர்களுக்கு
அடிமைகளுக்கு
அரும்பணி ஆற்றியுள்ளார்.

**டேமியன் அடிகளார்** – தொழுநோயாளருக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்து இறுதியாகத் தொழுநோயால் பீடிக்கப்பட்டு இறந்தார்.

**பிரடெரிக் ஓசானம் அடிகளார்** – ஏழைகளுள் ஏழையாக இருந்து கிறிஸ்துவைக் கண்டு, ஏழைகளுக்கு ஏதாவது கொடுப்பதைவிட அவர்களை அந்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்காகப் பாடுபட்டார்.

புனித வின்சன்ட் டீ பவுல் சபை எனும் பெயரில் பணியை ஆரம்பித்தார்.

**உலகம் முழுவதிலும் வாழும் எமது சகோதரங்களே!**



*ஏழ்மையை நாம் உரிமையாகப் பெறவில்லை.
நல்ல எண்ணத்தோடு உன்னைச் சூழ உள்ளவர்களைப் பாருங்கள். அவர்களுக்குப் பணிபுரியுங்கள்.
அவர் உங்களை அன்பு செய்தார். அவர் உங்களை அன்பு செய்ததுபோல அவரை அன்பு செய்வோம்.*

**–அன்னை திரேசா**

(இங்கு "அவர்" எனக் குறிப்பிடப்படுவது கிறிஸ்துவே.)

- **மேற்கூறப்பட்ட அன்னை திரேசாவின் கூற்றிலிருந்து உமது வாழ்வுக்கு எடுக்கக் கூடிய முன்மாதிரிகையை எழுதவும்.**

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

நம் அயலில் உள்ளவர்களை மிகவும் நேசிப்போம். எல்லோரும் எங்களை அன்பு செய்ய வேண்டுமெனவும், எம்மோடு சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டுமெனவும் எதிர்பார்ப்போம். இவ்வாறே நாமும் மற்றவர்களை நேசிக்க வேண்டுமென திருவிவிலியம் இவ்வாறு கூறுகிறது.

**உன் மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக!**
**(லேவி. 19:18)**

அன்பும் கீழ்ப்படிதலும் இருந்தால் அங்கு ஒற்றுமை நிலவும். ஒற்றுமையினால் எமக்கும் பலம் கிடைக்கும்.

எமது குடும்பத்தில் உள்ள ஒற்றுமையைப் பாடசாலைக்கு எடுத்துச் செல்வோம். பின்னர் நாம் வாழும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஒற்றுமை எனும் நற்பண்பைப் பரவச் செய்யலாம். அன்புள்ள உள்ளத்தோடு வாழ்வதன் மூலம் எமது நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாக்க முடியும். அவற்றுள் சில,

- விருந்தோம்பல்
- பெரியவர்களை மதித்தல்
- எளிமையான வாழ்வு
- ..............................................
- ..............................................

(உமக்குத் தெரிந்தவற்றை வெற்றிடத்தில் எழுதவும்)

**எனது வாழ்க்கைக்கு...**

எம்மிடம் உள்ளதை அயலவர்களுடன் பகிர்ந்து வாழ்வதன் வழியாக ஒற்றுமையாக வாழ்வோமாக.

## செயற்பாடு:

- **உமக்குத் தெரிந்த நற்பழக்கங்கள் ஐந்து ஒரு சுவரொட்டி மூலம் முன்வைக்கவும்.**